நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 41/2021

அரசு தரப்புக்காக அ. சா. 3 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலைச்செல்வி | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 3 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 12th day of June 2025.

**__முதல் விசாரணை__**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 05.56 )

நான் தற்போது அம்பிகாபுரத்தில் குடியிருக்கிறேன். ஆஜர் எனது பக்கத்து வீட்டுக்காரர். நான் விவசாய வேலை செய்து வீட்டை நிர்வாகம் செய்கிறேன். எதிரியின் மனைவி சுகன்யாவை தெரியும். 7 வருடத்திற்கு முன்பு நான் ஒருநாள் வேலைக்கு போய்விட்டு வந்தபோது வீட்டிற்கு வெளியே கத்தும் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது சுகன்யா எரிந்து கிடந்ததை பார்த்தோம். ஊரில் இருப்பவர்கள் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து சிதம்பரம் ஓ.பி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நானும் பக்கத்தில் இருந்தவர்களும் சிதம்பரம் மருத்துவமனைக்கு செல்லவில்லை. என்னிடம் சுகன்யா எதிரியை பற்றி எதுவும் சொல்லவில்லை. சுகன்யா அடிக்கடி வயிற்றுவலி என்று என்னிடம் சொல்வார். ஆஜர் எதிரிக்கும் சுகன்யாவிற்கும் சண்டை நடந்ததை நான் பார்க்கவில்லை. போலிஸ் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முழுமையாக ஆதரவு அளிக்காத நிலையில் ஏற்கனவே போலீசார் விசாரணையில் விசாரித்த போது கூறியிருப்பதை மறுத்துள்ள நிலையில் இந்த சாட்சியிடம் அரசு தரப்பு வழக்கை எடுத்துரைத்து மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய இந்திய சாட்சி சட்டப்பிரிவு 154ன் கீழ்**

**அனுமதி கோரினார். இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை–</u>

என் வீட்டிற்கு பக்கத்தில் வசித்து வந்த எதிரியும் அவருடைய மனைவி சுகன்யாவும் ஆரம்பத்தில் சந்தோஷமாக இருந்ததாகவும் பிறகு எதிரி அன்பரசன் குடித்துவிட்டு மனைவியிடம் அடிக்கடி சண்டை போட்டு வந்தார் என்றும் 07.04.2020 ஆம் தேதி மாலை 04.30 மணியளவில் சுகன்யா வீட்டில் சத்தம் கேட்டேன் பக்கத்தில் இருந்த அனைவரும் சென்று பார்த்தபோது அன்பரசன் அவரது மனைவியை கைகளில் ஏந்தி உடலில் போர்வையை போற்றியவாறு நின்றிருந்தார் என்றும் சுகன்யா தீ காயங்களுடன் காணப்பட்டார் என்றும் நான் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்தேன் என்றும் அதில் ஏற்றி ராஜா முத்தையா மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும் எதிரி வாய்தகராறு செய்ததாலும் கொடுமை செய்ததாலும் வாழ பிடிக்காமல் தானே மண்ணெண்ணை எடுத்து ஊற்றி கொண்டதாக மருத்துவமனையில் இருந்த சுகன்யா என்னிடம் சொன்னதாக போலிசாரிடம் என்னை விசாரித்தபோது சொல்லியுள்ளேன் என்றும் எதிரி எனது பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் அவரை காப்பாற்ற வேண்டி தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 06.05 )

2025 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

/Sd/–G.KULASEKARAN
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.